இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 20 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 14 – சனிக்கிழமை 30 ஆகஸ்ட் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 20 : Thiruvalluvar Year - 2056 - Aavani 14 - Saturday 30 August 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவின் திறமை மற்றும் உற்பத்தித் துறையின் மூலதனத் தலைநகராகத் திகழ்கிறது!

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஆக. 30-**

**இந்திய அரசின் 2023 - 24ஆம் ஆண்டின் தொழில் துறை சார்ந்த வருடாந்திரக் கணக்கெடுப்பு நேற்று முன்தினம் வெளியிடப்பட்டதையொட்டி, தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா வலைதளப் பதிவொன்றினை வெளியிட்டிருந்தார்.**

**அதில் அவர், புள்ளிவிவரத் தரவுகளைச் சான்றுகாட்டி, “தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவின் திறமையின் தலைநகரமாகவும், உற்பத்தித் துறையின் மூலதனத் தலைநகராகவும் திகழ்கிறது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டிருந்தார்.**

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவின் அப்பதிவினையடுத்து வெளியிட்ட வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “திராவிட மாடல் ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும்!” எனச் சூளுரைத்துள்ளார்.**


தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவின் வலைதளப் பதிவு வருமாறு:-

நம் தமிழ்நாடு, இந்தியாவின் வேகமாக முன்னேறும் பொருளாதார வளர்ச்சி கொண்ட மாநிலம் என்ற பெருமையுடன், மிகப்பெரிய அளவில் தொழில்துறை சார்ந்த வேலை வாய்ப்புகளை வழங்கும் மாநிலமாகவும் திகழ்கிறது.

இந்திய அரசின் 2023-24 தொழில்துறை சார்ந்த வருடாந்திரக் கணக்கெடுப்பு இன்று வெளியிடப்பட்டுள்ள நிலையில், தொழில்துறை சார்ந்த வேலை வாய்ப்புகளில் தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது.

நாட்டின் மக்கள் தொகையில் தமிழ்நாட்டின் பங்கு வெறும் 5-6% தான். ஆனால், நாட்டின் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களில் 15.24% நாட்டின் மக்கள் தொகையில் தமிழ்நாட்டின் பங்கு வெறும் 5-6% தான். அதாவது, நாட்டின் ஒவ்வொரு ஆறு தொழிலாளர்களில் ஒருவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்.

மேலும், 40,100க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளுடன் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடு மீண்டும் இந்தியாவின் முதலிடத்தைப் பிடித்துள்ளது - (நாட்டின் மொத்த தொழிற்சாலைகளில் 15.43%).




இது நமது மாநில அரசின் தரவுகளால் அல்ல, ஒன்றிய அரசின் தரவுகளால் உறுதிப்படுத்தப்பட்டது. எதிர்க்கட்சிகள் பரப்புகின்ற அரசியல் உள்நோக்கம் கொண்ட தவறான குற்றச்சாட்டுகளுக்கு இதுவே சிறந்த பதிலடியாகும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில், தமிழ்நாடு 14 ஆண்டுகளுக்குப் பிறகு 11.19% பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. இச்சாதனையில் உற்பத்தித் துறையும், தொழில்துறையின் முதலீட்டுச் செயற்பாடுகள் #JobsForTN என்ற இலக்கில் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்துவதும் முக்கியப்பங்கு வருகிறது. மற்ற மாநிலங்கள் முதலீட்டுத் தொகையை மட்டுமே கவனிக்கும் நிலையில், திராவிட மாடல் அரசு வேலைவாய்ப்பை முதன்மைப்படுத்துகிறது.

தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவின் திறமையின் தலைநகராகவும் உற்பத்தித் துறையின் மூலதனத் தலைநகராகவும் திகழ்கிறது!

முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு முதலீடுகளைத் தொடர்ந்து ஈர்த்து வருவதால், தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையின் எதிர்காலம் இதுவரை இல்லாத வகையில் ஒளிமிகுந்ததாக இருக்கிறது.

இவ்வாறு அப்பதிவில் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா குறிப்பிட்டிருந்தார்.

இப்பதிவை மேற்கோள் காட்டி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**திராவிடத்தால் வாழ்கிறோம்! திராவிடமே நம்மை உயர்த்தும்! எல்லோரையும் வாழ வைக்கும்!**

**அமித் ஷா முதல் பழனிசாமி வரை தி.மு.க. ஆட்சியைப் பழித்துரைக்கும் அனைவருக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசே தந்துள்ள ‘நெத்தியடி பதில்’ இதோ!**

**சட்டம் ஒழுங்கைப் பேணிக் காத்து, தொழில் செய்வதற்கான சூழலை மேம்படுத்தி, தடையற்ற மின்சாரம் போக்குவரத்து வசதிகள் என அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கி, வேலைக்குத் தேவையான திறன்களை இளம் தலைமுறையினருக்கு அளித்து நாம் நாளும் தீட்டிய திட்டங்களால் இந்தச் சாதனை சாத்தியமாகி இருக்கிறது!**

**Dravidian Model ஆட்சியின் சாதனைச் சரித்திரம் தொடரும்! அரசியல் காழ்ப்புணர்வில் தி.மு.க. ஆட்சிக்கு எதிராக அள்ளிவீசப்படும் அவதூறுகளில் சத்தும் இல்லை; சாரமும் இல்லை என மக்கள் புறந்தள்ளுவார்கள்!**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

> **திராவிடத்தால் வாழ்கிறோம்!**
> **திராவிடமே நம்மை உயர்த்தும்!**
> **எல்லோரையும் வாழவைக்கும்!**

---

# கழகத் தலைவராக 8ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார், முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் நடைபெற்ற 11 தேர்தல்களிலும் மாபெரும் வெற்றி பெற்றவர்!

## முத்தான மக்கள் நலத்திட்டங்களை நிறைவேற்றி – அகில உலக அளவிலும் நீங்கா இடம் பிடித்தவர்!

**சென்னை, ஆக. 30-**

**தமிழ்நாட்டின் முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.க. ஸ்டாலின் அவர்கள், கழகத் தலைமைப் பொறுப்பை ஏற்று இன்று (28.8.2025) 7 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது.**

மக்களிடையே ஆழ்ந்த பாசமும், தொண்டர்களிடையே உறுதியான ஒற்றுமையும் ஏற்படுத்திய இவரது தலைமையின் பயணம், கழக வளர்ச்சியின் பொற்காலமாக அமைந்துள்ளது.

**அரசியல் பயணப் பொறுப்புகள்**

- 1966 - கோபாலபுரம் இளைஞர் தி.மு.க. அமைப்பாளர்
- 1967 - பகுதிப் பிரதிநிதி
- 1969 - மாவட்டப் பிரதிநிதி
- 1982 - இளைஞரணி செயலாளர்
- 1989 - சட்டமன்ற உறுப்பினர் (ஆயிரம் விளக்கு தொகுதி)
- 1996 - சென்னை மாநகர மேயர்
- 2003 - துணைப் பொதுச் செயலாளர், தி.மு.க.
- 2006 - தமிழ்நாடு அரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்
- 2008 - கழகப் பொருளாளர்
- 2009 - தமிழ்நாடு துணை முதலமைச்சர்
- 2016 - எதிர்க்கட்சித் தலைவர்
- 2017 - தி.மு.க. செயல் தலைவர்
- 2018 - தி.மு.க. தலைவர்
- 2021 - தமிழகத்தின் முதலமைச்சர்



**தி.மு.க. தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் 11 தேர்தல்களில் வெற்றி பெற்று, எதிரிகளுக்கு தோல்விகளை பரிசாகத் தந்த மாபெரும் தலைவர்**

தளபதி அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைப் பொறுப்புக்கு வந்தபின் - தாமே சிந்தித்து தாமே முடிவுகளை மேற்கொண்டு சந்தித்த முதல் தேர்தல் 2019இல் நாடாளுமன்றத் தேர்தல்.

அதில் தமிழகத்தின் 39 தொகுதிகளில், 38 தொகுதிகளை வென்று மகத்தான வெற்றிச் சரித்திரத்தைத் தொடங்கினார்.

இரண்டாவதாக 2021 சட்டமன்றத் தேர்தல் - பத்தாண்டு காலப் பாதக ஆட்சியை விரட்டி - ஆறாம் முறையாக கழக ஆட்சியை நிறுவி - முதலமைச்சரானார்.

மூன்றாவதாக 2021 அக்டோபரில் நடைபெற்ற 9 மாவட்டங்களின் ஊராட்சித் தேர்தலிலும் மகத்தான வெற்றி கண்டார்.

நான்காவதாக 2022 பிப்ரவரியில் தமிழகம் முழுதும் நடைபெற்ற நகராட்சித் தேர்தல்களில் அதுவரை எந்த ஒரு அரசியல் கட்சியும் பெறாத மாபெரும் வெற்றியை திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தேடித்தந்தார்.

ஐந்தாவதாக தற்போது (2023 மார்ச்) நடைபெற்ற ஈரோடு இடைத் தேர்தலிலும் மகத்தான வெற்றிகண்டு, ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

2024ல் நடைபெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள நாற்பது தொகுதிகளையும் தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் கைப்பற்றி ஒரு புதிய வரலாற்றுச் சாதனை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சாதனையில் பல முக்கிய அம்சங்கள் அடங்கியிருக்கின்றன. பி.ஜே.பி. கட்சி போட்டியிட்ட 23 இடங்களில் ஒன்றில்கூட வெற்றி பெற முடியவில்லை. அத்துடன் 11 தொகுதிகளில் டெபாசிட்களையும் இழந்துள்ளது.

அ.தி.மு.க. கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் போட்டியிட்ட 40 தொகுதிகளில் ஒரு தொகுதியில் கூட

தொடர்ச்சி 3ஆம் பக்கம்